

Vol.22 | No. 1 | January 2018

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## FEAST OF DENHA





Chris Fest - 2K17 - Killiyoor



Killiyoor, Pastoral Visit
- 10.12.2017




Alphonsa College, Christmas Celebration
22.12.2017

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No :1 January 2018

# இறையருள்
# IRAIARUL




Editorial Board

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**

Chief Editor
**Fr. Joseph Santhosh**

Executive Editor
**Mr. Soundara Raj**

Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**



Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**


## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் திருமுகம் | 05 |
| பேராயர் திருமுகம் | 09 |
| Feast and B'day | 11 |
| சிறுமலர் | 12 |
| குழந்தை ஈசோ | 13 |
| இளையோர் இயக்கம் | 14 |
| வின்சென்ட் தே பவுல் சபை | 16 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 18 |
| செங்கோட்டைச் செய்திகள் | 19 |
| சமூக சேவை சங்கம் | 21 |
| மறைவட்டச் செய்திகள் | 25 |
| மறைமாவட்டச் செய்திகள் | 27 |
| Bishop's Engagements | 28 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/77/2017

31 December 2017

Dears,

Greetings from Bishop's House, Thuckalay! I am sure you had a meaningful celebration of Christmas in your respective settings. We have just entered the new year. Let me greet you, dear Fathers, a grace-filled New Year. May you experience God's choicest blessings throughout this year 2018!

The Syro-Malabar Church keeps the Mission Week from 6 January 2018 to 12 January 2018. You have already read the Circular that our Major Archbishop wrote for the occasion and I am sure you have read it to the people on 31 December 2017 in all our Churches. St John Paul in one of his catechesis given on 19 April 1995 speaks about evangelization and I want to reflect on this topic, as we are about to mark the Mission Week.

The Pope says that the command of Christ to preach Gospel to the ends of the earth, makes the Church catholic and gives her the missionary nature. This is reiterated in the Decree Ad Gentes of Vatican II. According to it, "The pilgrim Church is missionary by her very nature, since it is from the mission of the Son and the mission of the Holy Spirit that she draws her origin, in accordance with the decree of God the Father" (AG 2). It is a mystery established by the divine Trinitarian plan which is fulfilled in the Church and made manifest as permanently her own, since the day of Pentecost.

For the Pope, being essentially missionary does not mean merely that the Church has a universal mission to all humanity. Instead, it means that in her constitutive reality, in her soul, and thus it could be said in her very psychology, she possesses a dynamism that concretely unfolds in preaching the Gospel, in spreading the faith and in calling to conversion. This interior drive, intimately linked to her mission, comes from the Holy Spirit and is therefore part of her mystery. The dynamism that comes from it is thus expressed as a distinctive characteristic of the whole Church. This is shown in a concrete and effective way especially in those who, starting with the apostles, go to regions far from their land for the

sake of the Gospel.

The Pope acknowledges the fact that all the members within the Church are not called upon to go to the mission lands. Even if all are not called personally to go to the mission lands, each one in the Church and with the Church has the task of spreading the light of the Gospel, according to the saving mission passed on by the Redeemer to the ecclesial community. Indeed, all are called to cooperate in this mission.

In the last decades, Syro-Malabar Church has recognized this truth and has been sending missionaries to different parts of the world. The missionary Eparchies, beginning with Chanda established on 31 March 1962, have played great role in spreading the message of Jesus Christ. Our Eparchy too was originally begun as a mission territory of the Archdiocese of Changanassery. Last year, Pope Francis extended the territory of our Eparchy asking us to spread the message of Christ that we have received from the missionaries to the wider population within the State of Tamilnadu.

Hence, it is our duty to encourage our people to become part of this mission of the Church. The missionary week that we are going to celebrate from 6 January 2018 to 12 January 2018 should become a launching pad for our missionary activities in the newly added territories. I invite all of you, dear Fathers, to encourage our people to become part of this venture by contributing their mite in ways that are possible to them so that we can be faithful to our mission.

CONCLUSION

We are approaching the celebration of the Denha, which marks the manifestation of Jesus to the world. The celebration also coincides the beginning of the Syro-Malabar Mission week. I am sure the Mission League will celebrate this week in meaningful ways so that our young people are enthused and motivated to love the missionary work of the Church. The collection that will be taken during those days will be sent to Kakkanad for the upkeep of the Syro-Malabar Missions all over the world. I request you, dear Fathers, to encourage our children to get involved in this important aspect of our Church. With my prayers and blessings,

Yours in Christ Jesus,

+George Rajendran SDB

Bishop of Thuckalay

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Circular Letter No/GR/05/2017

## ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி அவர்கள் கூறியது போன்று சீரோ மலபார் திருச்சபையின் மறைபரப்புப் பணியின் எல்லையை இந்தியா முழுவதுமாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விரிவு படுத்தியுள்ளார். அத்தோடு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் மூன்றாக பிரித்து அவற்றை தக்கலை, இராமநாதபுரம் மற்றும் ஓசூர் மறைமாவட்டங்களின் மறைபரப்புப் பணிக்காக திருத்தந்தை ஒப்படைத்துள்ளார். தக்கலை மறைமாவட்டத்தின் எல்லையை கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துகுடி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், தேனி, மதுரை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தி, இம்மாவட்டங்களின் மறைபரப்புப்பணிகளுக்காக நம்மை நியமித்துள்ளார். இவ்விரிவாக்கம் நாம் செய்து வருகின்ற மறைபரப்புப்பணியை மேலும் கடமை உணர்வோடு நிறைவேற்ற நம்மைத்தூண்டுகிறது. எனவே மறைமாவட்டத்தோடு சோ;ந்து மிகுந்த ஆர்வத்துடன் மறைபரப்புப்பணிகளில் ஈடுபட உங்களுக்கு அன்போடு அழைப்பு விடுக்கின்றேன்.

சீரோ மலபார் திருச்சபையின் மறைபரப்புப்பணி வார நிகழ்வுகள் அனைத்தும் நமது மறைமாவட்டத்தில் மிஷன் லீக் இயக்கம் ஒருங்கிணைக்கிறது. மிஷன் லீக் இயக்குநரோடு சேர்ந்து வருகின்ற ஜனவரி 5 மற்றும் 6 நாட்களில் அருட்தந்தையர்களும் இறைமக்களும் பங்களவில் மிஷன் லீக் குழந்தைகளோடு இணைந்து சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று இவ்வேளையில் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

✝ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்டம்

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Pastoral Letter No/GR/33/2017 19 December 2017

# ஆயர் திருமுகம்

நான்கு வாரங்கள் நீளும் தயாரிப்புகளை உள்ளடக்கிய மங்கள வார்த்தைக்காலத்தின் இறுதியில் கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் சிறப்பிக்கிறோம். இந்த இருபத்தைந்து நாட்களில், உணவிலே மாற்றங்களை ஏற்படுத்தி மாமிசம் தவிர்த்து ஆன்ம தயாரிப்பில் ஈடுபட்டோம். "ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்; அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள்; பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும்; மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும்; கோணலானவை நேராக்கப்படும்; கரடு முரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்" (லூக் 3:46) என்னும் திருமுழுக்கு யோவானின் வார்த்தைகளை உள்ளங்களில் ஏற்பது அவசியமாக இருக்கிறது. மேலும் திருவெளிபாடு நூலின் இறுதியில் காணக்கிடக்கும் "ஆண்டவராகிய இயேசுவே, வாரும்" மாரானாதா (திவெ 22:20) என்னும் வேண்டுதலையும் மனதில் கொள்வோம். ஆக, இருபத்தைந்து நாட்கள், கிறிஸ்து பிறப்பு எனும் விழாவுக்கான முன்தயாரிப்பின் நாட்கள் என்பதே உண்மை.

ஆதாமின் வீழ்ச்சியால் மனித இனம் சந்தித்த வீழ்ச்சியிலிருந்து விடுவிக்கக் பழைய ஏற்பாடு காலத்தில், கடவுள் பல்வேறு விதங்களில் மனிதரோடு தொடர்பு ஏற்படுத்தினார். அத்தொடர்பின் உச்சமாக, சீனாய் மலையில் வைத்து உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டார். அவ்வுடன்படிக்கையின் வாயிலாக கடவுள் தம்மையே நம்மோடு இணைத்துக் கொண்டார், நாமும் அவரோடு இணைக்கப்பட்டோம். மனித இனம் மீண்டும் மீண்டும் பாவத்தில் விழுந்து தடம் மாறிப் பயணித்த போது, கடவுள் இறைவாக்கினர்களை அனுப்பினார். கடவுளை புறந்தள்ளி வேற்று வழிகளில் பயணிக்கும் அவலத்தைக் கண்டுக் கடவுள் கலங்கினார். பல்வேறு விதங்களில் மனிரை அன்பு செய்து அவர்களை உடன்படிக்கையில் நீடிக்கச் செய்ய கடவுள் முயன்றார். அவரது அன்பு வற்றாத நதியாக என்றும் மனிதரை நோக்கி வழிந்தோடிக் கொண்டிருந்தது. இறுதியில் பிரிக்க இயலா உடன்படிக்கை ஒன்றை மக்களோடு ஏற்படுத்திக் கொள்ள அவர் திருவுளம் கொண்டார். அதற்காக, மனித உருவில்

மகனையே அனுப்பினார். நம் சதையையும் எலும்பையும் அவர் ஏற்றார். இறுதியில் இரத்தம் சிந்தி தமது அன்பின் ஆழத்தை எண்பித்தார். நம்மைத் தேடும் கடவுளின் முழு வடிவமாக இயேசு மாறினார்; "வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார். அவரது மாட்சியை நாங்கள் கண்டோம்" (யோவா 1:14).

கிறிஸ்துமஸ் சில மனிதர்களையும் சிலச் சூழல்களையும் மனத்திரைமுன் கொண்டு வருகிறது. மனிதர்களாக, யோசேப்பு, மரியா, இடையர்கள் மற்றும் கிழக்கிலிருந்து வந்த மூன்று ஞானிகள் ஆகியோர் முதன்மையாக நிற்கின்றனர். கிறிஸ்துவின் பிறப்பின் வேளையில் அவர்கள் ஆற்றியப் பங்கை நினைவு கூர்தல் ஆன்மீக உணர்வைத் தரும். அத்தோடு, விடுதியில் இடம் கிடைக்காமல், மாட்டுத்தொழுவத்தில் இயேசு பிறக்க நேர்ந்தது. வாழ்வில் ஏற்கும் இக்கட்டுகளை மீட்பின் அடையாளமாகக் கண்டிட அழைக்கவும் செய்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:16) என்னும் புனித யோவானின் வார்த்தைகளையே மனதில் முதன்மையாகக் கொண்டிட அழைக்கப்படுகிறோம். இவ்வார்த்தைகள் கிறிஸ்துமஸ் விழாவின் கருப்பொருளை தனக்குள்ளேக் கொண்டுள்ளது.

**கிறிஸ்துமஸ் தரும் செய்திகள்**

**கடவுள் நம்மோடு**

"இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்ஞ் இம்மானுவேல் என்றால் 'கடவுள் நம்மோடு' என்பது பொருள்" (மத் 1:23). நம்மோடு வசிக்க வந்திருக்கும் கடவுளின் உறவை அறிந்து அவரின் பிரசன்னத்தை உள்ளார உணர முயல்வோம்.

**ஒளியின் விழா**

"அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது; இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை" (யோவா 1:5) என்று யோவான் நற்செய்தியில் நாம் வாசிக்கிறோம். சூரியனின் வெளிச்சமானது, உலகைப் பரப்புகிறது. உள்ளுக்குள்ளே எரியும் நெருப்பால் அது உலகுக்கு ஒளி கொடுக்கிறது. அதைப் போன்று நாமும் இறையன்பால் உள்ளுக்குள் எரிந்து வெளிச்சமாக உருமாறிட அழைக்கப்படுகின்றோம்.

**மன்னிப்பின் விழா**

மழலை இயேசு மன்னிப்பின் செய்தியைச் சுமந்து வருகிறார். ஒருவர் மற்றவரை மன்னித்து வாழும் போது, அவர் அருளும் மன்னிப்பை நம்மால் ஏற்க இயலும். "எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும்" (லூக்

11: 4) என்பதே ஆண்டவர் கற்பித்த செபம் தரும் செய்தியாகவும் உள்ளது. கடவுளின் உருவில் படைக்கப்பட்ட ஒரே தந்தையின் பிள்ளைகளாக மானிடர் யாவரும் உள்ளனர் என்பதை உணர்த்தும் பெரும் நிகழ்வாகவும் கிறிஸ்மஸ் விழா அமைந்துள்ளது. இந்தியாவில் பல்வேறு மதங்களைச் சேர்ந்த மனிதர் யாவரும் அமைதியிலும் மகிழ்ச்சியிலும் சேர்ந்து வாழும் கலையைக் கற்றிருக்கிறோம். பிரிவினையில் விஷம் ஊட்டும் மதவாதம் சில இடங்களில் தலைதூக்குவதை விதிவிலக்காகக் கொள்வோம். இச்சம்பவங்களைக் கண்டு மனம் துவளாமல், தொடர்ந்து மன்னிப்பின் செய்தியை ஏந்தியவர்களாய் அமைதியில் வாழ, அதன் தூதர்களாக செயல்பட வேண்டியது கிறிஸ்துமஸ் விடுக்கும் அழைப்பாக உள்ளது. கடைசி இரவுணவின் வேளையில், "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" (யோவா 17:21) என்னும் ஆண்டவரின் செபம் நமது செவிகளில் முழங்குவதாக.

**தியாகத்தின் விழா**

கிறிஸ்துமஸ் தியாகத்தின் செய்தியையும் நமக்குக் கற்பிக்கிறது. சிறு சிறு பரிசுகளை பிறரோடு பகிர்ந்திடும் வேளையாக அது வெளிப்படுகிறது. கொடுப்பதிலே அடங்கியுள்ள தியாகத்தையும் அதன் பயனாய் விளையும் மனமகிழ்ச்சியையும் கிறிஸ்துமஸ் செய்தியாய் நமக்கு அளிக்கிறது. கடவுளின் மாட்சியில் விளங்கிய இயேசு தமது கடவுள் தன்மையிலிருந்து இறங்கி வந்து மானிடனாகப் பிறந்தார். இதைக் குறித்து தூய பவுல், "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாய்க் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" (பிலி 2:67) எனக் கூறுகிறார். மனிதராகப் பிறந்த இயேசுவை உள்ளார அறிதலே அவரை உள்ளத்தில் ஏற்க ஒரே வழி. புத்தகங்களோ பிற பிடிப்பினைகளோ அவ்வறிவையும் அனுபவத்தையும் தந்திட இயலாது. இதயம் உணரும் இதமான அனுபவம் ஒன்றே மனிதராதல் என்னும் மறைபொருளின் உண்மையை அறிவதற்கான வழி.

**அனைத்து உயிரினங்களுக்குமான விழா**

கிறிஸ்தவர்களுக்கானது மட்டுமல்ல கிறிஸ்துமஸ். அது அகில உலகுக்குமானது. சிறு பறவைகள், மரங்கள் என இயற்கை முழுவதும் கிறிஸ்துவின் பிறப்பில் அகம் மகிழ்கின்றது. கிறிஸ்துமஸ் இரவு அன்று அதிசயகரமாக அனைத்து விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பேசும் ஆற்றல் கடவுளால் அளிக்கப்பட்டது என்றும் அதன் வழியாக ஒளியை உள்ளார உணர்ந்து கடவுளைப்

புகழ அவற்றால் இயன்றன என்றும், ஒரு பிரஞ்சு கதையானது கூறுகிறது. இயற்கையும் நம்முடைய ஒரு பகுதியாக ஏற்கும் போது உள்ளத்தில் உருவாகும் கனிவானது, மனிதரை முழுதாக ஏற்கவும் அவர்களை அன்பு செய்யவும் நம்மைத் தூண்டும்.

அரசர்க்கெல்லாம் அரசர் ஏழை பாலனாய் மாட்டுக்கொட்டிலில் எளிமையின் உருவாய் பிறந்தார். நாமும் எளியராகிட அழைக்கப்படுகிறோம். உலகை ஒளிர்விக்கும் கிறிஸ்துவாகும் ஒளியை மனதில் ஏற்க நாம் எழுவோம். உள்ளுக்குள் இருளிலே மூழ்காமல் ஒளியை நோக்கி விழித்தெழுவோம். கிறிஸ்துமஸ் வேளையில் கிறிஸ்துவின் ஒளியை மனங்களில் ஏற்போம்.

**உதவிக்கரம் நீட்டுவோம்**


இவ்வாண்டைய கிறிஸ்துமஸ் சோகமான நினைவுகளையும் சூழலையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஒக்கிப் புயலால் மக்கள் வீடுகளையும், விளைச்சல்களையும், இழந்து தவிப்பதோடு, கடலுக்குச் சென்று திரும்பாத சொந்தங்களை நினைத்து ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் துயர்களில் நாமும் பங்கேற்போம். அவர்களின் கண்ணீரை நாமும் பகிர்ந்து கொள்வோம்.

கேரள ஆயர் பேரவையும் தமிழ்நாடு ஆயர் பேரவையும், இவ்வாண்டைய கிறிஸ்மஸ் காணிக்கையை ஒக்கிப் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்க தீர்மானித்துள்ளது. ஆகையால் நாமும் கிறிஸ்துமஸ் காணிக்கையை தமிழ்நாடு ஆயர் பேரவைக்கு அனுப்ப தீர்மானித்துள்ளோம். எனவே மக்கள் அனைவரும் தாராளமாய் இவ்விரக்கச் செயலில் பங்கேற்க அழைக்கிறேன்.

இவ்வேளையில், மீட்புப் பணியில் ஈடுபட்ட மக்களையும் பங்குதந்தையரையும் நான் வெகுவாக பாராட்டுகிறோம். தொடர்ந்து நலப்பணிகளில் நாம் ஈடுபடுவோம்.

தந்தை மகன் தூய ஆவியின் ஆசி உங்களோடு தங்கியிருப்பதாக!

ஈசோவில் அன்புடன்



✝ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB|தக்கலை மறைமாவட்டம்

---

✣இவ் ஆயர் திருமுகத்தை 24.12.2017 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.

✣கிறிஸ்துமஸ் திருப்பலிக்கிடையே எடுக்கின்ற காணிக்கை ஒகிப் புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக எடுக்கப்படுகின்றது. எனவே அருட்தந்தையர்கள் இதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு எடுத்துக்கூறி தராள மனதுடன் நன்கொடை வழங்க தயார் செய்ய வேண்டும்.

✣தமிழ்நாடு ஆயர் பேரவைக்கு அனுப்பிவைக்க வேண்டிய இச்சிறப்புக் காணிக்கையை டிசம்பர் 31 ம் தேதிக்கு முன் ஆயர் இல்லத்தில் ஒப்படைக்க கேட்டுக்கொள்கிறேன்.

# உயர் பேராயர் சுற்றுமடல்

**சீரோ மலபார் திருத்தொண்டு வாரம் (6&12 ஜனவரி 2018)**

சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்கள் அனைத்து பேராயர்களுக்கும், ஆயர்களுக்கும், குருக்களுக்கும், இருபால் துறவியருக்கும், இறைமக்களுக்கும் எழுதுவது.

**ஈசோமிசியாவில் அன்பான சகோதர சகோதரிகளே,**

சீரோமலபார் திருச்சபை, ஈசோவின் தெனகாத்திருநாளாகிய ஜனவரி 6 முதல் தொடர்ந்து வருகின்ற 12ம் தேதி வரையான நாட்களை சீரோமலபார் சபையின் மறைபரப்பு வாரமாக கொண்டாடுகிறது.

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்கு 16: 15) என்னும் இயேசுவின் வார்த்தைகளை மனதில் கொண்டு உலகெங்கும் சென்று அவரது திராட்சைத்தோட்டத்தில் வேலைசெய்யும் நம் சகோதர சகோதரிகளை நினைவு கூர்ந்து அவர்களுக்காக செபிக்கும் ஒரு தருணமாக மறைபரப்பு வாரத்தை சீரோமலபார் திருச்சபை கொண்டாடுகிறது.

"திருச்சபை தன் இயல்பால் மறைபரப்பு தன்மை உடையது" (AG2) என்னும் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் படிப்பினையோடு சேர்ந்து சீரோமலபார் திருச்சபை உலகின் கடையெல்லைவரை, சிறப்பாக பாரதத்தின் ஒவ்வொரு இடங்களிலும் வாழுகின்ற மக்களுக்கு நற்செய்தியின் ஒளியைப் பரப்ப மிகவும் கவனமாக செயல்பட்டு வருகிறது. ஏனெனில் சீரோமலபார் திருச்சபையின் முதன்மையான திருத்தொண்டு என்பது நற்செய்தி அறிவித்தல் ஆகும். இவ் உண்மையை நாம் கண்கூடாக கண்டுணர்ந்திருக்கிறோம். சீரோமலபார் மக்களாகிய நம் அனைவர் மனதிலும் ஆழமாக பதிந்துள்ள மறைபரப்பு பணி என்னும் நெருப்புத் தனலை ஒருபோதும் அணைய விடாமல் அதன் ஒளியை மெருகூட்டி அதிகரிக்கச் செய்வோம். இம்மேலானப் பணிக்காக தூய ஆவியின் கொடைகள் நம்மீதும், சபையின் மீதும் நிறைவாகப் பொழிய நாம் தொடர்ந்து செபிப்போம்.

மறைபரப்புப் பணிகளுக்கான ஆவல் இன்றைய இளைஞர் களிடையே அதிக அளவில் எதிர்பார்க்கப்படுகிறது. இளையோரின் சிந்தனைகளையும், திறமைகளையும்

மறைபரப்புபணிக்காக பயன்படுத்த வேண்டும் என்னும் நோக்குடன் திருச்சபை செயல்பட்டும் வருகிறது. இளைஞரான இயேசு பறைசாற்றிய நற்செய்தி இன்றும் இளைஞர்களை கவர்ந்து இழுக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. 2018 ஆம் ஆண்டு உரோமாவில் வைத்து நடைபெற இருக்கும் ஆயர்களின் கூட்டம் (ஞூலமெுன) இளையோரை மையமாக கொண்டதே என்பது திருச்சபை இளையோரில் எவ்வளவு எதிர்பார்ப்புகளும் நம்பிக்கையும் வைத்திருக்கிறது என்பதை தெளிவுப்படுத்துகிறது. "இளையோர் நம்பிக்கை மற்றும் இறையழைத்தலை தேர்ந்து தெளிதல்" என்னும் கருத்தை மையமாக கொண்டுள்ள ஆயர் பேரவை வெற்றி அடைவதோடு மக்களுக்கு பயன்படவும் வேண்டி இறைவனோடு செபிப்போம்.

எர்ணாகுளம் உயர்மறை மாவட்டத்தின் புல்லுவழி என்னும் கிராமத்தில் பிறந்த அருட்சகோதரி இராணிமரியா மறைபரப்புபணிக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டாக விளங்குகிறார். 1992 பிப்ரவரி 25 ஆம் தேதி சமந்தீர்சிங் என்னும் வாடகைக் கொலையாளியால் இன்டோரின் உதய்நகரில் இரத்தசாட்சியான அருட்சகோதரி இராணிமரியாவின் செயல்பாடுகள் ஏழைகளின் வாழ்வு உயரவும் ஏராளமான மக்களை கிறிஸ்துவிடம் அழைத்து வரவும் காரணமாக அமைந்தது. இறை இயேசுவோடு அருட்சகோதரி கொண்டிருந்த தனிப்பட்ட அன்பே அவரின் மறைபரப்புப்பணிக்கு உந்து சக்தியாக இருந்தது. அருட்சகோதரி மறைபரப்புப்பணி மீது கொண்ட ஆர்வமும், ஆன்மதியாகமும் உலகம் முழுவதும் மறைபரப்புப்பணிச் செய்யும் மறைத்தொண்டர்களுக்கு மனவலிமையும் ஊக்கமும் அளிக்கட்டும் என இறைவனிடம் வேண்டுகிறேன்.

சீரோமலபார் திருச்சபை உயர்ப் பேராயமாக உயர்த்தப்பட்டதின் வெள்ளிவிழாவை நாம் இவ்வருடம் கொண்டாடி வருகிறோம். இவ்வேளையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சீரோமலபார் திருச்சபைக்கு இந்தியா முழுவதும் மறைபரப்புபணி செய்வதற்கான முழு அதிகாரம் அளித்துள்ளார் என்பது நம் மகிழ்ச்சியை இரட்டிப்படையச் செய்கிறது. சபைக்கு புதிதாக கிடைத்த மறைபரப்பு அதிகாரம், நற்செய்தி அறிவிக்கும் நமது பணியை மேலும் கடமை உணர்வு உடையதாக மாற்றியுள்ளது. ஆகவே, சபையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமாக நாம் அனைவரும் 'ஒன்றாய் முன்செல்ல' கடமைப்பட்டிருக்கிறோம்.

சபையின் மக்கள் அனைவரும் நற்செய்தி அறிவித்தல் பணியில் அதிக ஆர்வம் காட்டவும், ஏராளமான இறையழைத்தல்கள் நமது குடும்பங்களிலிருந்து உருவாகவும், மறைபரப்பு ஆர்வத்தோடு நாம் என்றும் வாழவும் தேவையான முயற்சிகள் எடுப்பதோடு செபிக்கவும் செய்வோம்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஈசோவில் அன்புடன்

✠ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி

சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர்

காக்கனாடு மவுண்ட் செண்ட் தோமஸில் செயல்படும், சீரோமலபார் திருச்சபையின் தலைமைச் செயலகத்திலிருந்து நவம்பர் 3, 2017 அன்று இச்சுற்றுமடல் வெளியிடப்பட்டது.

1. இச்சுற்றுமடல், டிசம்பர் 31, 2017 அன்று திருப்பலிக்கிடையே அனைத்து பங்குகளிலும், சிற்றாலயங்களிலும் வாசிக்க வேண்டும்.

2. மறைமாவட்ட அனைத்து ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் சீரோ மலபார் திருச்சபையின் மறைபரப்பு வாரத்தை நன்முறையிலும் பொருள் உணர்த்தும் வகையிலும் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## FEAST AND BIRTHDAYS REV FATHERS- JANURAY

| FEAST DAY | JAN | | BIRTHDAY |
|---|---|---|---|
| Fr. Sanil Panthichirackal | 03 | 07 | Fr. Chacko Basil CMI |
| Fr. Ritto Thoompunkal | 03 | 17 | Fr. Saji Elembasserril SDB |
| | | 17 | Fr. Luka Kollamparampil CMI |
| Fr. Johnsilal Arackaparampil | 03 | 18 | Fr. Toji Parampilparampil |
| | | 20 | Fr. Sanil Panthchirackal |
| Fr. Davis Karukappally CMI | 20 | 21 | Fr. Printo Kurias |
| Fr. Justin Cheruvelil | 20 | 24 | Fr. Lijo Thekkel |
| Fr. Mijo Puthenpurayil | 20 | 24 | Fr. Antony Chundelikkatt |
| Fr. Robin Kurumullil | 20 | 26 | Fr. Geo Choozhikunnel |
| Fr. Sam Puthuparampil CMI | 20 | 26 | Fr. Jomon Mangalamadom |
| Fr. Sebi Manimalakandathil | 20 | | |

சிறுமலர் MISSION LEAGUE

# சிறுமலர் மிஷன் லீக்

**கிறிஸ்துமஸ் கூடுகை**

சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் கிறிஸ்துமஸ் கூடுகை 16.12.2017 அன்று மதியம் 2 மணியளவில் ஆயர் அவர்கள் தலைமையில் கல்லுவிளை



அலுவலக அரங்கில் நடைபெற்றது. இறைவேண்டலோடு தொடங்கிய நிகழ்வை இயக்குநர் அருட்தந்தை ஷோஜோ அவர்கள் வரவேற்றார். செயலர் அறிக்கை சமர்ப்பித்தார். தொடர்ந்து ஆயர் அவர்கள் கேக் வெட்டி தலைமையுரையாற்றினார். ஆயர் அவர்கள் நாட்டின் பல்வேறு பிரச்சனைகள் குறித்தும், குறிப்பாக ஓகிப்புயலால் குமரி மாவட்டத்தின் இழப்பு பற்றியும் கூறினார். இச்சூழலில் இவ்விழாவை எளிமையாக கொண்டாட வேண்டுமெனவும், பிறரிடம் கைநீட்டி வாங்கும் கலாச்சாரம் மாறி கொடுக்கும் கொடையாளிகளாக மாற கேட்டுக்கொண்டார்.

**திருத்தொண்டு வாரம்**

சீரோ மலபார் திருச்சபை ஜனவரி 6 முதல் 12 வரை திருத்தொண்டு வாரமாக சிறப்பிக்கின்றது. மறைமாவட்டம் சார்பில் 5, 6 ஆகிய இருநாட்கள் கொண்டாடவும், அந்நாட்களில் சிறப்பு காணிக்கை எடுத்து திருத்தொண்டு பணிகளுக்காக மிஷன் லீக் மாணவர்களுடன் இணைந்து உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும் நமது மறைமாவட்ட விரிவாக்கத்தை எடுத்துக்கூறி மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

**தீர்மானங்கள்**

1. மறைமாவட்ட திருத்தொண்டு நிலையங்கள் பற்றி தகவல் சேகரித்து கண்காட்சி நடத்துதல்
2. மறைவட்டங்கள் தலா ஒரு திருத்தொண்டு நிலையத்தை தத்தெடுத்து நடத்துதல். தொடர்ந்து ஆயர் அவர்களின் நிறைவு ஆசிருடன் இனிதே நிறைவடைந்தது.

அருட்தந்தை ஷோஜோ|இயக்குநர்

HOLY CHILDHOOD

# குழந்தை ஈசோ



## குழந்தை ஈசோ இயக்கம்

"ஈசோ ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்." (லூக் 2:52)

**பொறுப்பாளர்கள் கூடுகை**

குழந்தை ஈசோ இயக்கத்தின் வழிகாட்டிகள் மற்றும் பொறுப்பாளர்கள் கூடுகை 16.12.2017 அன்று கல்லுவிளை அலுவலகத்தில் நடைபெற்றது. இயக்குநர் தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்க அருட்தந்தை வினு அவர்கள் கிறிஸ்துமஸ் விழா பற்றி வகுப்பு வழங்கினார்.

**கிறிஸ்துமஸ் விழா**

பின்னர் கிறிஸ்துமஸ் விழா கல்லுவிளை சமூக சேவை



சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பாசேரில் சச அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தந்தை அவர்கள் விருந்தினர்களுடன் இணைந்து கேக் வெட்டி வாழ்த்துரை வழங்கினார். அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் அவர்களின் பிறந்த நாள் விழாவும் இந்நிகழ்வில் கொண்டாடப்பட்டது.

**குழந்தைகள் தினம்**

டிசம்பர் 28 அன்று அனைத்து



ஆலயங்களிலும் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. குறிப்பாக மாறப்பாடி மற்றும் சூசைபுரம் பங்குகளில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**தியானம்**

கிறிஸ்டின் தியானம் பிப்ரவரி 10 மற்றும் 11 ஆகிய நாட்களில் நடைபெறும்.

**கலைவிழா**

பிப்ரவரி 04 அன்று ஆறுகாணி மறைவட்டத்திற்கும் 13 அன்று மற்ற 5 மறைவட்டங்களுக்கும் அந்தந்த மறைவட்டங்களில் நடைபெறும்.

அருட்தந்தை ஜோமோன்
இயக்குநர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## மத நல்லிணக்க கிறிஸ்துமஸ் விழா

கல்லுவிளை சமூக சேவை சங்கம், அப்பகுதி பல்சமய நண்பர்களுடன் இணைந்து டிசம்பர் 16 அன்று மதங்களை கடந்து மனித நேயத்தை வலியுறுத்தும் சிந்தனையில் மதநல்லிணக்க கிறிஸ்துமஸ் விழாவை கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் கொண்டாடியது. மாலை 6 மணிக்கு தக்கலை மறைமாவட்ட ஆயர் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு இளைஞர் இயக்கம் சார்பில் வரவேற்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வை இளைஞர் இயக்கத்தினர் ஒருங்கிணைத்து வழிநடத்தினர். நிறைவில் மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோர்கள் தமிழக கலாச்சார நடனமான தப்பாட்டம், லெசிம் மற்றும் ஒயிலாட்டம் ஆகிய நடனங்களை சிறந்த முறையில் வெளிப்படுத்தி அனைவரையும் மகிழ்வித்தனர். சமூக சேவை சங்க இயக்குநர் அவர்கள் சிறப்புப் பரிசும் வழங்கி ஊக்குவித்தார்.





## இளையோர் கிறிஸ்மஸ் 2017

2017 ஆம் ஆண்டின் இளையோர் இயக்க கிறிஸ்து பிறப்புவிழா டிசம்பர் 23 சனிக்கிழமை மதியம் 2.30 மணிக்கு படந்தாலுமூடு திருஇருதய அரங்கில் இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தொடக்க வழிபாடுடன் தொடங்கிய இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக குமரித்தோழன் மற்றும் திரு. ஜஸ்டஸ் அவர்களும் கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினர். இயக்குநர் தந்தை அவர்கள் கேக் வெட்டி விழா உரையாற்றினார். அனைத்து இளைஞர்களும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர். மஞ்சாலுமூடு மற்றும் சூசைபுரம் மறைவட்ட இளைஞர்கள் நடனமாடினர். நிறைவில் ஆஸ்டின் அவர்கள் தலைமையில் உயிருள்ள குடில் நிகழ்வு நடைபெற்றது. இயக்கப்பாடலுடன் மாலை 4.30

மணிக்கு இனிதே நிறைவடைந்தது.

**திறன் வளர் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி**

தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்கத்தினருக்கான திறன்வளர் மற்றும் தலைமைத்துவப் பயிற்சி நடைபெற்று வருகிறது. அதன்படி சூசைபுரம் மறைவட்ட இளையோருக்கான பயிற்சி கிள்ளியூர் புனித தேவமாதா ஆலயத்தில் டிசம்பர் 30 இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இப்பயிற்சியில் குறும்படம் பயிற்சி அளிக்கப்பட்டது. குறும்படம் இயக்குதல், நடித்தல், புகைப்படம் எடுத்தல், ஒளிப்பதிவு ஆகிய



பயிற்சிகளை சங்ஙனாச்சேரி ஊடகவியல் துறை மாணவர் திரு. ஜான்சன் அவர்கள் அளித்தார். பிற்பகல், குறும்படம் எடுக்கும் நோக்குடன் இளைஞர்களை உற்சாகப்படுத்தும் நோக்குடனும், அரைநாள் சுற்றுலாவாக, அம்சி வரை அழைத்துச் செல்லப்பட்டனர். நிகழ்வில் 35 பேர் பங்கேற்றனர்.

**புதிய பொறுப்பாளர்கள்**




பயிற்சிக்கு பின் 4 மணியளவில் பயிற்சி பற்றி ஆலோசனை நடைபெற்றது. நிறைவில் மறைவட்ட பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக ராஜேந்திர பாபு மாங்கரை, துணைத்தலைவராக சுஜிலெட் மாங்கரை, செயலராக ஸ்டெபி கிள்ளியூர், இணைச்செயலராக அஜித் கிள்ளியூர், பொருளராக சந்தோஷ் மாங்கரை ஆகியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை கிள்ளியூர் பங்குத்தந்தையும் இயக்குநருமாகிய அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் செய்திருந்தார்.

செல்வி. பபிஷா| செயலர்.

## சிறுமலர் மறைவட்ட ஆலய அர்சிப்பு

பிலாங்காலை சிறுமலர் மறைவட்ட ஆலய அர்ச்சிப்பு டிசம்பர் 29 அன்று நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் அர்ச்சித்தார். பங்குத்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில், அருட்தந்தை தோமஸ் போக்குவரையத்து மற்றும் பங்குமக்கள் அனைவருக்கும் நன்றி.



VINCENT-DE-PAUL
வின்செந்தியர்



# தக்கலை மத்திய சபை

**ஆயருக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்து**

ஆண்டுதோறும் தக்கலை மத்தியசபை பொறுப்பாளர்கள் கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு ஆயர் அவர்களை சந்தித்து வாழ்த்து கூறி ஆசி பெறுவது வழக்கம். அதைப்போன்று இவ்வாண்டு டிசம்பர் 23 அன்று காலை 8 மணிக்கு ஆயர் அவர்களை சந்தித்து கிறிஸ்துமஸ் கேக் கொடுத்து வாழ்த்துக் கூறினர். ஆயர் அவர்களும் அனைவருக்காகவும், வின்செந்திய பணிகளுக்காகவும் செபித்து, ஆசி வழங்கினார்.

**கிறிஸ்துமஸ் விழா**

ஓசானாம் உயர்கல்வி நிலையத்தில் கிறிஸ்துமஸ் விழா டிசம்பர் 22 அன்று கொண்டாடப்பட்டது. மஞ் சாலுமூடு மறைவட்ட பங்குத்தந்தை பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில்



அவர்கள் கலந்து கொண்டு தலைமையுரையாற்றினார். மாணவர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து மதிய உணவு வழங்கப்பட்டது.

**புத்தாக்கம்**

அதங்கோடு தூய மரிய கொரற்றி ஆலயத்தில் புனித மரியகொரற்றி ஆண்கள் மற்றும் புனித குழந்தை தெரசா பெண்கள் ஆகிய இரு கிளைச்சபைகள் செயல்பட்டு வந்தது. கடந்த ஒருசில மாதங்களாக தொய்வு ஏற்பட்டு சரியாக செயல்படாமல் இருந்தது. எனவே தொடர்ந்து செயல்படுத்த டிசம்பர் 10 அன்று ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் தலைமையில் மத்திய செயலர் சகோ. எட்வின்சன் அவர்கள் வருகை தந்து புத்தாக்கப்பயிற்சி அளித்தார். தொடர்ந்து இருகிளைச்சபைகளுக்கும் புதிய பொறுப்பாளர் தேர்வுசெய்யப்பட்டது. அதன்படி ஆண்கள் கிளைச்சபையின் தலைவராக சகோ. லாரன்ஸ், துணைத்தலைவராக சகோ.

ஜெனிஷ், செயலராக சகோ. ஆல்பர்ட் ராஜ், பொருளராக சகோ. ஜெபின் ஆகியோரும் பெண்கள் கிளைச்சபையின் தலைவராக சகோ. றோஸ் அலக்ஸ், துணைத்தலைவராக சகோ. கலா, செயலராக சகோ. ஸ்டெல்லா, பொருளராக சகோ. ஜெயா ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வட்டாரசபைச் செயலர் சகோ தோமஸ் அவர்களும் கலந்து கொண்டு கணக்குகள் பற்றி விளக்கமளித்தார்.

**புதிய பொறுப்பாளர் பணியேற்பு**

புதிய பொறுப்பாளர்களாக தேர்வுசெய்யப்பட்டோர் டிசம்பர் 17 ஞாயிறன்று திருப்பலிக்குப் வட்டாரசபைத் தலைவர் அவர்கள் பணியேற்பு உறுதிமொழி வாசிக்க பொறுப்பாளர்கள் ஏற்றுச்சொல்லி பணியேற்றனர். புதிய பொறுப்பாளர்களுக்கு பங்குமக்கள் வாழ்த்துக்கள் கூறினர். நிறைவில் ஆன்மீக ஆலோசகர் அவர்கள் ஆசி வழங்க இனிதே நிறைவடைந்தது.

**கிறிஸ்துமஸ் விழா**

அதங்கோடு பங்கின் இருகிளைச்சபைகளும் இணைந்து கிறிஸ்துமஸ் நாளை தத்துக்குடும்பம் மற்றும் ஓகிப்புயலால் பாதிக்கப்பட்ட குடும்பத்தோடு சிறப்பித்தனர்.





பின்னர் ஆன்மீக ஆலோசகர் மற்றும் வட்டார சபைத் தலைவர் சகோ. ஜெபராஜ் அவர்கள் முன்னிலையில் பணியேற்றுக்கொண்டனர். பொறுப்பாளர்கள் எரியும் மெழுகுவர்த்தி ஏந்த கிறிஸ்மஸ் நாளான டிசம்பர் 25 அன்று காலை 11 மணிக்கு மேல்மிடாலம் பகுதியில் ஓகிப்புயலில் குடும்பத்தலைவரை இழந்த ஒருவரின் குடும்பத்திற்கு சென்று அவர்களுக்காகவும்

அக்குடும்பத்தலைவர் விரைவில் திரும்ப கிடைக்கவும் செபித்தனர். மேலும் அக்குடும்பத்தினருக்கு ரூ.5000/- மற்றும் கிறிஸ்துமஸ் பரிசுகளும் வழங்கினர்.

மாலை 5 மணிக்கு தத்துக்குடும்ப உறுப்பினர் ஒருவர் இல்லம் சென்று அசைவ உணவு சமைத்து கேக் வெட்டி அக்குடும்பத்தினரோடு இரவுணவு உண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்து கூறி ரூ.500/- வழங்கினர்.

## அருட்சகோதரர்களிடமிருந்து...




கிறிஸ்மஸ் விடுமுறைக்காக அனைத்து அருட்சகோதரர்களும் மறைமாவட்டம் வருகை தந்தனர். டிசம்பர் 23 அன்று அருட்சகோதரர்களின் கிறிஸ்மஸ் கூடுகை தக்கலை சங்கமத்தில் வைத்து ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆயர் அவர்கள் கேக் வெட்டி பரிசுகள் வழங்கினார். அருட்சகோதரர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்தனர். ஆயரோடு மதிய உணவு அருந்தி மகிழ்ந்தனர். மேலும் கிறிஸ்துமஸ் விழாவுக்காக பல்வேறு பங்குகளுக்கு அனுப்பபட்டனர்.

டிசம்பர் 26 முதல் 30 வரை நடைபெற்ற மறைக்கல்வி மன்ற மறைவட்ட கலைப்போட்டிகளுக்கு மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்களின் வழிகாட்டுதலில் மதிப்பீடு செய்யும் பணிக்காக அனுப்பப்பட்டனர். பின்னர் அன்று மாலை தத்தம் இல்லங்களுக்குத் திரும்பினர். ஜனவரி 4, 5 ஆகிய நாட்களில் தங்களின் குருத்துவ கல்லூரிகளுக்கு செல்கின்றனர். அருட்சகோதரர் லிஜு அவர்கள் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக தற்போதும் ஓய்வெடுத்து வருகிறார். விரைவில் நலமடைய செபிக்க வேண்டுகிறேன்.

அருட்சகோதரர் போஜி|தலைவர்

| வரவிருக்கும் நிகழ்வுகள் | |
|---|---|
| ஜனவரி 01 | குருத்துவ அருட்பொழிவு திருத்தொண்டர் ஆன்றோ பிரபின் |
| ஜனவரி 06 | புனித அல்போன்சா கல்லூரி மகளிர் விடுதி மந்திரிப்பு |
| ஜனவரி 07 | சாம்சபாத் மறைமாவட்ட தொடக்கவிழா |
| ஜனவரி 20 | கருணை இல்லம் பொன்விழா |
| ஜனவரி 27 | பருத்திவிளை சாந்தி நிலையம் பொன்விழா |

# செங்கோட்டைச் செய்திகள்

## கிறிஸ்துமஸ் விழா

செங்கோட்டை திருத்தொண்டு தளத்தில் உள்ள அனைத்து அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் இணைந்து 20.12.2017 அன்று புதூர் பள்ளியில் வைத்து கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடினார். மாலை 6.30 மணிக்கு ஆராதனையுடன் ஆரம்பமான இந்நிகழ்சியில் அருட்சகோதரி செலின்கொரின் சி.எம்.சி அவர்கள் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை வழங்கினார். அனைவரையும் உற்சாகமூட்டும் வகையில் அருட்தந்தை ஜிப்சன் எம்.சி.பி.எஸ் மற்றும் அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன. தொடர்ந்து ஆயர் அவர்கள் மறைமாவட்ட விரிவாக்கத்தைக் குறித்து பேசியதோடு கிறிஸ்மஸ் செய்தியும் வழங்கினார். துறவற சபை அருட்சகோதரிகள் மற்றும் அருட்தந்தையர்கள் கலைநிகழ்சிகள் நடத்தினர். தொடர்ந்து ஒருவருக்கொருவர் கிறிஸ்துமஸ் பரிசுகளை பரிமாறினர்.

## மாதர் ஜோதிஸ் போட்டி

23.12.2017 அன்று செங்கோட்டை வட்டார மாதர் ஜோதிஸ் இயக்கத்தினருக்கான பாயாசம் தயார் செய்யும் போட்டி நடைபெற்றது. இதில் வாஞ்சி பங்கு முதல் பரிசும், புளியரை இரண்டாம் பரிசும் பெற்றது. 24.12.2017 அன்று பங்குகள் மற்றும் கன்னியர் இல்லங்களில் புல்குடில் தயார் செய்யும் போட்டியும் நடைபெற்றது.

## திருமுழுக்கு

வாஞ்சி பங்கில் புதிதாக இணைந்த 5 நபர்களுக்கு 18.11.2017 அன்று திருமுழுக்கு வழங்கப்பட்டது. அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் திருமுழுக்கு வழங்கினார்.

## துறவறத்தார் கூடுகை

செங்கோட்டை திருத்தொண்டு தள அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் கூடுகை 26.11.2017 புனித ஜோசப் பள்ளியில் நடைபெற்றது. மாலை 6.30 மணிக்கு ஆராதனையுடன் ஆரம்பமாக அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் திருப்பலி பற்றி எடுத்துரைக்க, ஒப்புரவு அருளடையாளமும் வழங்கப்பட்டது. தொடர்ந்து ஒவ்வொரு இயக்கங்கள் சார்பில் போட்டிகள் நடத்த தீர்மானிக்கப்பட்டது. மறைமாவட்ட தினவிழாவில் ஜோசப் பள்ளி மாணவிகளின் நடனம் அனைவரையும் கவரும் வண்ணம் அமைந்திருந்ததை எடுத்துக்கூறி அதற்காக உழைத்த அருட்தந்தை டோனி எம்.சி.பி.எஸ் மற்றும் அருட்சகோதரி ஜெயாஜோஸ்

எச்.சி ஆகியோர்களுக்கு பாராட்டு தெரிவித்தார் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள்.

### மாதாந்திர தியானம்

டிசம்பர் மாத தியானம் டிசம்பர் 9, 2017 அன்று வாஞ்சி ஆலயத்தில் நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் செபமாலையுடன் ஆரம்பமாக அருட்தந்தை செபி அவர்கள் தியானஉரை வழங்கினார். தொடர்ந்து அருட்தந்தை ஜிப்சன் அவர்கள் ஆராதனை நடத்தினார். நிறைவில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மதிய உணவும் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

### செபமாலை திருப்பவனி

பாத்திமா அன்னை காட்சியளித்ததன் நினைவாக ஒவ்வொரு மாதமும் 13வது நாள் மேக்கரை ஆலயத்தில் செபமாலை திருப்பவனி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அருட்தந்தை ஜாண்பால்|ஒருங்கிணைப்பாளர்

## ஆயர் இல்ல கிறிஸ்துமஸ் விழா

தக்கலை ஆயர் இல்லத்தின் அருகாமையில் வசிக்கும் 25 குடும்பங்கள் இணைந்து ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில் டிசம்பர் 23 அன்று கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடினர்.

ஆயர் இல்ல அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்சகோதரி ஆனி குழுவினர் இறைவணக்கம் பாடினர். சுய அறிமுகத்தைத் தொடர்ந்து பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் மறைமாவட்ட இரக்கப் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார். தலைமையுரையாற்றிய ஆயர் அவர்கள் இயேசு கிறிஸ்து அகில உலகில் அனைத்து மக்களுக்குமாக பிறந்தார். எனவே அனைவரும் இணைந்து இவ்விழாவை கொண்டாடுவது உகந்தது மட்டுமல்ல, உறவைப் புதுப்பித்துக் கொள்ள சரியான தருணமும் இது என்றார். தொடர்ந்து திரு. கிருஷ்ணன் நாயர், திரு. ஜெயக்குமார் மற்றும் திரு. மகாராஜன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். தொடர்ந்து ஆயர் அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி சிறப்பித்தார். களியல் மரியபவன் குழந்தைகளின் 'பிறப்பு' என்னும் குறுநாடகம் நடைபெற்றது. நிறைவாக பேரருட்தந்தை டென்சி அவர்கள் நன்றி கூறினார். திரு. எட்வின்சன் ஒருங்கிணைத்தார். சி.எம்.சி துறவற மகாணத் தலைவி, அருட்சகோதரி விஜி மற்றும் குழுவினர், அருட்தந்தை தங்கச்சன், அருட்தந்தை ஜினோய், வழக்கறிஞர் அஜித் மற்றும் திரளானோர் கலந்து கொண்டனர்.

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

### Educare கிறிஸ்மஸ்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் Educare ஏழை மாணவர்களுக்கான உயர் ஆங்கில வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாணவர்களின் கிறிஸ்துமஸ் விழா டிசம்பர் மாதம் 10 ம்



தேதியன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக நேசமணி கிறிஸ்தவ முதல்வர் முனைவர் பால் ராஜ் அவர்கள் கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் செய்தி வழங்கினார். அப்போது அவர், குமரி மாவட்டம் புயலால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. மாணவர்களாகிய நீங்கள் உதவும்போது இயேசு உங்கள் இதயத்தில் பிறப்பது மட்டும் அல்ல, மகிழ்வான கிறிஸ்துமஸாக மாறும். இதை உங்களோடு கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறினார். இடைடையே கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட திருத்தொண்டு செயலர் அருட்தந்தை சஜி எலம்பாசேரி ஆகியோர் வாழ்த்துரை கூறி, மணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப், அருட்சகோதரர் மகேஷ் மணவர்களின் பெற்றோர்கள், அலுவலக பணியாளர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கிறிஸ்துமஸ் விழா

கன்னியாகுமரி சமூக சேவை சங்க அலுவலகப்பணியாளர்கள், களப்பணியாளர்கள் மற்றும் சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கும் பாலர் பள்ளி ஆசிரியர்கள் இணைந்து டிசம்பர் மாதம் 23 ம் தேதியன்று கல்லுவிளை ஆசீர் அரங்கில் கிறிஸ்துமஸ் விழாவை சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினராக வெட்டுவெந்தி புனித அந்தோணியார் திருத்தல அதிபர் பேரருட்தந்தை. அருள்தேவதாசன் அவர்கள்

கலந்து கொண்டு கேக்வெட்டி செய்தி வழங்கினார். அப்போது அவர், கிறிஸ்துமஸ் என்றால் JOY அனைவரையும் கிறிஸ்து (Jesus) என நினைத்து பிறரையும் (Others) தன்னையும் (You) அன்பு செய்வது ஆகும், அதை இந்நிறுவனத்தோடு இணைந்து செயல்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறினார். இடையிடையே கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இயக்குநர் அருட்தந்தை சஜி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்.

வர்ணம் 2017

குழந்தைகளின் திறமையை வெளிக்கொணர குழந்தைகள் தினத்தையொட்டிகன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தால் மாவட்ட அளவிலான ஓவிய போட்டி மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டி நவம்பர்



14 ம் தேதியன்று கல்லுவிளை ஆசிர் அரங்கத்தில் வைத்து "வர்ணம் 2017" நடைபெற்றது. இதனை கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பாசேரில் அவர்கள் குத்து விளக்கேற்றி துவங்கி வைத்தார். இதில் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து 35 பள்ளிகளிலிருந்து 675 மாணவர்கள் இப்போட்டியில் கலந்துக் கொண்டனர். IV முதல் VI வகுப்பு வரை குழந்தைகள் தினம் என்ற தலைப்பில் ஓவியம் வரைதல் போட்டியில் கார்மல் மேல்நிலை பள்ளி நாகர்கோவில் மாணவர் முதல் இடத்தையும், VII முதல் X வரை குழந்தைகளுக்கு எதிரான வன்முறை என்ற தலைப்பில் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டியில் பெதனி மெட்ரிக் மேல்நிலை பள்ளி மாணவர் முதல் இடத்தையும் பெற்றனர். முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவர்களுக்கு பரிசுத் தொகையும் சான்றிதளும் வழங்கப்பட்டது. மேலும் சிறப்பாக வரைந்த மாணவர்கள் பள்ளி வாரியாக கௌரவிக்கப்பட்டனர். தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்கம் சார்பில் குழந்தைகளோடு "ஒரு மணிநேரம்" என்ற கலை நிகழ்சி நடைபெற்றது சிறப்பு விருந்தினராக தக்கலை காவல் துறை மேற்பார்வையாளர் திருமதி சிவசங்கரி அவர்கள் கலந்துகொண்டு குழந்தைகளை பாராட்டி பரிசுகளை வழங்கினார்.

இதில் தக்கலை மறை மாவட்ட இளைஞர் இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், தக்கலை காவல் துறை இணை மேற்பார்வையாளர் திரு ஜாண் கிறிஸ்டோபர் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். அருட்சகோதரர் மகேஷ் அவர்கள் நன்றியுரை கூறினார். இந்நிகழ்சியை கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தினர் இணைந்து செயல்படுத்தினர்.

**EDUCARE**

ஏழை மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தும் நோக்கில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் EDUCARE எனும் உயர் ஆங்கில வகுப்பை நடத்தி வருகிறது. இதில் புதிய



மாணவர்களை சேர்ப்பதற்கான கலந்தாய்வு நவம்பர் 2ம் தேதி அன்று கல்லுவிளை KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது இதில் மாணவர்களின் கல்வி திறன், கல்வி தகுதி, குடும்ப பொருளாதாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாணவர் தேர்வு நடைபெற்றது. இதில் கனனியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பாசேரி அவர்கள் மேற்பார்வையில் திட்ட அலுவலர் திருமதி ஷீபா மற்றும் EDUCARE ன் ஒருங்கிணைப்பு அலுவலர் அருட்சகோதரி நீஜா ஆகியோர், EDUCARE ன் புதிய மாணவர்களை தேர்வு செய்தார்கள். இதில் தக்கலை மறைமாவட்டத்திற்கு உட்பட்ட பங்குதளங்களில் உள்ள 5,6,7 வகுப்பு படிக்கும் சுமார் 200 மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

காளான் பயிற்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் ஒரு நாள் காளான் பயிற்சி முகாம் கனனியாகுமரி சமூக சேவை சங்க திட்ட அலுவலர் திருமதி ஷீபா அவர்கள் தலைமையில் கல்லுவிளை ஆசீர் அரங்கில் வைத்து நவம்பர் 21ம் தேதி

நடைபெற்றது. இதில் காளானை உணவில் சேர்ப்பதால் உடல் வளம் பெறும் மற்றும் இது தற்பொழுது உணவகங்களிலும் துரித உணவகங்களிலும் பேக்கரிகளிலும் பயன்படுகிறது. இதிலிருந்து மஷ்ரூம் ஒயின், பேக்கரி பண்டங்கள், ஊறுகாய், சுவையான உணவுகள் செய்யலாம். இதன் தேவை வருங்காலத்தில் மிக அதிகமாக இருக்கும் இதன் முதலீடு குறைவு லாபம் அதிகம் எனவும் கூறினார். பின்பு எவ்வாறு காளான் வளர்த்துவது என்ற செய்முறை வகுப்பும் நடைபெற்றது. இதில் 10 நபர்கள் கலந்து கொண்டனர்.

**அகில உலக ஏழைகள் தினம்**

உலகத்தில் பசியாலும் வீடு இல்லாத ஏழை மக்களுக்கும் உதவி செய்யவும் அவர்களின் வாழ்வு மேம்பாடு அடையவும் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்து அரசர் திருநாளுக்கு முந்தைய ஞாயிறு அகில உலக ஏழைகள் தினமாக கொண்டாடுமாறு திருதந்தை பிரான்சிஸ் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். அதன்படி கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நவம்பர் 19 ஆம் தேதி அகில உலக ஏழைகள் தினம் வயலின்கரை புனித அந்தோனியார் ஆலயத்தில் வைத்து சிறப்பிக்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு நித்திரவிளை மறைவட்டத்துக்கு உட்பட்ட வின்சென்ட் தே பவுல் தத்து



குடும்ப உறுப்பினர்களோடு இணைந்து உயர்ரக உணவு அருந்தி அவர்களுக்கு பரிசு பொருட்களும் வழங்கி சிறப்பித்தார். இதில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பாசேரில் மற்றும் நித்திரவிளை மறைவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் வயலின்கரை பங்கு மக்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை சஜி
இயக்குநர்

# மறைவட்ட செய்திகள்




## நித்திரவிளை மறைவட்டம்

**ஜெயமாதா ஆலயம் நித்திரவிளை**

கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு டிசம்பர் 21, 22 ஆகிய நாட்களில் தியானம், ஒப்புரவு நடைபெற்றது. 24 அன்று இரவு 11 மணிக்கு சிறப்பு வழிபாடும், திருப்பலியும் நடைபெற்றன. 31 அன்று ஆண்டிறுதி மற்றும் புத்தாண்டு சிறப்பு திருப்பலியும் நடைபெற்றன.

**வாறுதட்டு புனித சவேரியார் ஆலய குடும்ப விழா**

வாறுதட்டு ஆலய குடும்ப விழா 6.12.2017 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11.12.2017 அன்று இறந்தோர் நினைவு திருப்பலியுடன் நிறைவடைந்தது. பங்குத்தந்தை ஜோஸ் ஒட்டலாங்கல் அவர்கள் திருக்கொடியேற்ற, முதல் மூன்று நாட்கள் நற்செய்திப் பெருவிழா நடைபெற்றது. மேலும் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழா மற்றும் அன்பின் விருந்தும் நடைபெற்றன.

**புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ் சிறை**

அன்னை மரியாவின் அமலோற்பவ திருநாளான 8.12.2017 அன்று அருட்தந்தை போஜி அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு ஆயத்தமாக 21.12.2017 அன்று சிறப்பு ஆராதனை, ஒப்புரவு வழிபாடு மற்றும் தியானம் நடைபெற்றன. அருட்சகோதரர் றோபின் அவர்கள் தியான உரையாற்றினார்.

**முதியோர்களோடு கிறிஸ்துமஸ் விழா**

23.12.2017 அன்று மாலை 5 மணிக்கு மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் முஞ்சிறை அன்பகத்தில்



முதியோர்களோடு கிறிஸ்துமஸ் விழா கொண்டாடினர். அருட்தந்தை ஷைஜோ அவர்கள் தலைமை தாங்கி கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டார். அருட்தந்தை போஜி பறம்பில் பறம்பில் மற்றும் அருட்சகோதரர் போஜி ஆகியோர்கள் கிறிஸ்மஸ் செய்தி வழங்கினர். மாணவர்கள் சிறுக சிறுக சேமித்த காணிக்கையை

அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் கழுவன்திட்டை ஆலய கட்டுமான பணிக்காக அருட்தந்தை ஷோஜோ அவர்களிடம் வழங்கினர். தொடர்ந்து கிறிஸ்துமஸ் பரிசுகள் வழங்கப்பட்டது. இடையிடையே கலைநிகழ்சிகளும் நடைபெற்றன. நிறைவாக சேவைச் செம்மல் விருது பெற்ற ஆசிரியை சாலம்மா அவர்களின் பணியை பாராட்டி பரிசு வழங்கப்பட்டது. பின்னர் திருமதி ஸ்னேக லதா அவர்கள் நன்றியுரை கூற சிற்றுண்டியுடன் நிறைவடைந்தது.

### பிரிவு உபச்சாரவிழா

கடந்த ஆறு மாத காலமாக முஞ்சிறை ஆலய மேடையில் தங்கியிருந்து பங்குத்தந்தைக்கு துணையாக பணியாற்றி இடமாறுதல் பெற்ற அருட்தந்தை டோஜி அவர்களுக்கு பங்குமக்கள் சார்பில் பிரிவு உபசார விழா நடத்தப்பட்டது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜீஷ் அட்டியில் தந்தையவர்களின் சிறப்புகளை எடுத்துரைத்து நினைவுப் பரிசும் வழங்கினார்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### முதல் திருவிருந்து

24.12.2017 அன்று காலை 8.30 மணிக்கு மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலயத்தில் முதல் திருவிருந்து நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி 22 மாணவ மாணவியருக்கு முதல் திருவிருந்து அருளடையாளம் வழங்கி, கிறிஸ்துமஸ் வாழ்த்தும் கூறினார்.

## படந்தாலுமூடு மறைவட்டம்

அனைத்துப் பங்குகளிலும் கிறிஸ்துமஸ் சிறப்பாக கொண்டாடப்பட்டது. குறிப்பாக ஆயர் அவர்கள் அதங்கோடு புனித மரிய கொரற்றி ஆலயத்தில் கிறிஸ்துமஸ் திருப்பலி நிறைவேற்றினார்.

### கிறிஸ்துமஸ்

டிசம்பர் 24 இரவு 10.30 மணிக்கு ஆயர் அவர்களுக்கு அதங்கோடு பங்கு மக்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி, கிறிஸ்து பிறப்பு திருச்சடங்கு செய்து கிறிஸ்துமஸ் உரையாற்றினார். திருப்பவனியும் நடைபெற்றது. ஆயர் அவர்கள் 'நாம் ஒரு விண்மீன், அனைவருக்கும் ஒளி வழங்குபவராக விளங்க வேண்டும், இடையர்களுக்கு வழிகாட்டுயது போல் வழிகாட்டுபவர்களாக மாற வேண்டும்' என்று உரையாற்றியானார்.

### வெள்ளிவிழா

கிறிஸ்துமஸ் பொதுக்கூட்டம் மற்றும் அருட்சகோதரி ஜொசீனா அவர்களின் துறவற முதல் வார்த்தைப்பாட்டின் வெள்ளிவிழாவும் கொண்டாடப்பட்டது. திரு. லாரன்ஸ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். திரு. பெர்லின்

அவர்கள் அருட்சகோதரியோடான அனுபவத்தை பகிர்ந்தார். ஆயர் அவர்கள் கேக் வெட்டி வெள்ளிவிழா வாழ்த்துரை வழங்கினார். பாடகற்குழுவினர் வாழ்த்துப்பாடல் பாடி வாழ்த்தினர். கிறிஸ்துமஸ் தாத்தா நடனமும் நடைபெற்றது. பங்குமக்களின் வாழும் குடில் நிகழ்வு நடைபெற்றது. வெள்ளிவிழா வாழ்த்துப்பரிசும் வழங்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். நிறைவில் அனைவருக்கும் தேநீர்

## சூசைபுரம் மறைவட்டம்

கிறிஸ் பெஸ்ட் 2k17

கிள்ளியூர் தேவமாதா ஆலயத்தில் இளைஞர் இயக்கத்தின் சார்பில் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு கிறிஸ் பெஸ்ட் 2k17 கலைப்போட்டிகள் 10.12.2017 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 4 மணிவரை ஆலய வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. பல்வேறு பங்குகளிலிருந்து வருகை தந்து சிறப்பித்தனர். பங்கேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும் நன்றி.

தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா|சிநேக லதா|செலின் மேரி

# மறைமாவட்டச் செய்திகள்

நியமனம் மற்றும் விடுவிப்பு

அருட்தந்தை மாத்யூ குழிஞ்ஞாலில் அவர்கள் ஆனையடி புனித ஜார்ஜியார் திருத்தொண்டுதள பங்குத்தந்தை பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனையடி ஆலய புதிய பங்குத்தந்தையாக அருட்தந்தை போஜி பறம்பில் பறம்பில் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனவரி 6 அன்று பொறுப்பேற்றுக் கொள்வார்.

மதுரை திருத்தொண்டுதள சந்திப்பு

ஆயர், குருகுல முதல்வர் மற்றும் ஆவணக்காப்பாளர் ஆகியோர்கள் இணைந்து கோவை சி.எம்.ஐ துறவற சபையினரின் கீழ செயல்படும் மதுரை திருத்தொண்டுதளத்தை சந்தித்தனர். முதலில் ஆயர் அவர்களுக்கு சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். தொடர்ந்து புனித சாவறா சீரோமலபார் திருத்தொண்டு நிலையம் என பெயரிடப்பட்டு அதன் முதல் பொறுப்புப் பங்குத்தந்தையாக அருட்தந்தை நிமிஷ் சுண்டன்குழியில் சி.எம்.ஐ அவர்கள் நியமிக்கப்பட்டார். 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திருத்தொண்டுதளத்தில் தற்போது 35 குடும்பங்கள் உள்ளன.

## BISHOP'S ENGAGEMENTS JANUARY 2018

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 02.00 pm | Ordination of Dn. Anto Prabin, Pilankalai |
| 2 | Tue | 05.00 pm | Karode: Family Sangamam |
| 3 | Wed | 09.30 am | Curia Meeting |
| 4 | Thu | 10.00 am | Theology Course Faculty Meeting \|CMC Thuckalay |
| 5 | Fri | | Bishop's House |
| 6 | Sat | 09.30 am | Soosaipuram: St. Alphonsa Hostel Blessing>> Shamshabad |
| 7 | Sun | 09.00 am | Inauguration of Shamshabad Diocese>> Kochi |
| 8-13 | Mon | | Synod at Kakkanadu >> Thuckalay |
| 14 | Sun | 04.00 pm | Nattalam: SM Holy Qurbana with Soosaipuram Forane |
| 18 | Mon | 11.30am<br>03.00pm | Kalluvilai: KKSSS Day<br>Bishop's House: Meeting of Mission committee |
| 16 | Tue | 10.00 am | Pulinkunnu: Marriage Qurbana |
| 17 | Wed | 05.00 pm | Nithravilai: Karunai Illam Thanksgiving Qurbana |
| 18 | Thu | 10.00 am | Kumarakam: Marriage of Elsamma's Daughter |
| 19 | Fri | 02.00 pm | Bishop's House: Sinai Theology faculty meeting |
| 20 | Sat | 07.15 am<br>11.00 am<br>04.00 pm | CMC Thuckalay Qurbana<br>Manjalumoodu: Holy Qurbana<br>Nithravilai: Silver Jubilee public meeting |
| 21 | Sun | 10.00 am | Mattakkara Pala: Feast day Qurbana<br>First Holy Communion (Cyril UK) |
| 22 | Mon | 11.00 am | Kollamkodu (Mecode): Marriage Qurbana >> Chennai |
| 23-24 | Tue | | TNBC Meeting at Chennai >> To Thuckalay |
| 25 | Thu | 04.00 pm | Nagercoil: School Annual Day Celebration |
| 26 | Fri | 09.30 am | Athirampuzha: Holy Qurbana |
| 27 | Sat | 10.00 am<br>05.00 pm | Minor Seminary: Home Day<br>Shenkottai: Pulari school annual day |
| 28 | Sun | 09.30 am | Palugal: Vincent De Paul Golden Jubilee Holy Qurbana |
| 29 | Mon | 01.00 pm | Palayamkottai: Meeting at Bishop's House |
| 30 | Tue | 09.00 am<br>02.00 pm | Mezhacode: First Holy Communion<br>Soosaipuram: Alphonsa College Graduation Day |
| 31 | Wed | | Bishop's House |

Fr. Thomas Sathianesan |Eparchial Chancellor



Catechism Forane Level Competition, Arukany
- 28.12.2017



Consecration - Little Flower Church, Pilankalai
- 29.12.2017



Visit to a Station in Madurai
- 31.12.2017

CHRISTMAS CELEBRATION









IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570